


# ஜீலை 27

# புனித பந்திலேயோன் (-305)

இவர் பிரசித்தி பெற்ற வைத்தியர். பேரரசன் மாக்சிமியானது அரண்மனை ஒன்று நிக்கொமேதியா நகரில் இருந்தது. அங்கு இவர் வைத்தியத் தொழில் செய்து வந்தார். ஏழைகளிடம் பணம் வாங்க மாட்டார். இவர் கிறிஸ்தவர் என்றாலும் நல்ல கிறிஸ்தவராக இல்லை. வயோதிக குரு ஒருவர் இவருக்கு புத்திமதிகள் சொன்னார். அதன்பின் நல்ல கிறிஸ்தவ வாழ்க்கை வாழலானார். இவருடன் இருந்தவர்கள் பொறாமை கொண்டு இவர் கிறிஸ்தவர் என அரசனிடம் கூறினார்கள். அரசன் முன் இவர் தைரியத்துடன் ‘நான் கிறிஸ்தவன்’ என்று கூறினார். நயவஞ்சக வார்த்தைகளால் அரசன் இவரை இழுக்க முயன்றான். இவர் அசையவில்லை. இவரையும் இவரை மனந்திருப்பிய குருவையும் கொடூரமாக உபாதித்தபின் தலையை வெட்டி கொன்றார்கள்.

இவரது இரத்தம் தெற்கு இத்தாலியாவில் உள்ள அமால்பி மேற்றிராசனக் கோவலிலில் காப்பாற்றப்பட்டு வருகிறது.

**சிந்தனை:**

நாமும் இவரைப் போல் கைம்மாறு எதிர்பார்க்காமல் பிறருக்கு உதவி செய்ய பழக வேண்டும்.

**செபம்:**

ஆண்டவரே, சன்மானத்தை எதிர்பாராமல் உமக்காக நாங்கள் நன்மை செய்யும் வரத்தைத் தாரும்.